DAILY THANTHI

DATE: 08.01.2024

PAGE NO: 11

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுநிலை படிப்புகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, ஜன.8-

மத்திய பல்கலைக்கழகங்களில் புதிய கல்விக்கொள்கையின்படி இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்புகளில் சேர்வதற்கு 'கியூட்' தேர்வு எனப்படும் பல்கலைக்கழகங்களுக்கான பொதுநுழைவுத்தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 2024-25 கல்வியாண்டுக்கான புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் டிப்ளமோ படிப்புக்கான கியூட் தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

எனவே கியூட் முதுநிலை பட்டப்படிப்புக்கு *https://pgcute.samarthac.in/.* என்ற இணைதள முகவரியில் சென்று பதிவுசெய்ய வேண்டும். புதுவை பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு கியூட் தேர்வு எழுத வருகிற 24-ந் தேதி வரை விண்ணப்பிக்கலாம். பி.எச்டி., படிப்புகளுக்கு வருகிற 12-ந் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINAMALAR

DATE: 08.01.2024

PAGE NO: 01

# புதுச்சேரி பல்கலையில் முதுகலை படிப்பிற்கு ஜன., 24ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

**புதுச்சேரி, ஜன. 8–**

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் முதுகலை படிப்புகளுக்கு வரும் 24ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

தேசிய தேர்வு முகமை நடத்தும் பல்கலைக்கழகப் பொது நுழைவுத் தேர்வு கியூட் (பி.ஜி) – 2024ன் அடிப்படையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகளில் சேரலாம்.

இதற்கான இணைய வழியில் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கான இணையதளம் கடந்த டிசம்பர் 26ம் தேதி முதல் திறக்கப்பட்டுள்ளது.எனவே, புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் 2024–25ம் கல்வியாண்டில் முதுகலைப் பட்டம், பட்டயப் ,படிப்புகளில் சேர விரும்புவோர் கியூட் (பி.ஜி) நுழைவு தேர்வுக்கு https://pgcuet.samarth.ac.in எனும் இணைய முகவரியில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் https://www.pondiuni.edu.in/admissions-202324/ எனும் பல்கலைக்கழக வலைத்தளத்தில் உள்ள தகவல் கையேட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நுழைவு தேர்வுக்கு புதுச்சேரி பல்கலைக்கழகம் வழங்கிய தேவையான தேர்வு தாள் குறியீடுகளைத் தேர்ந்தெடுப்பது அவசியம்.

மேலும், தகவல்களுக்கு https://pgcuet.samarth.ac.inஎனும் என்.டி.ஏ.வின் வலைத் தளத்தை தவறாமல் பார்க்கவும். பல்வேறு முதுகலை மற்றும் பட்டயப் படிப்புகளுக்கான ஆன்லைன் விண்ணப்ப படிவத்தைச் சமர்ப்பிக்க வரும் 24ம் தேதி இறுதி நாளாகும். விண்ணப்பங்களில் திருத்தம் செய்ய 27 முதல் 29ம் தேதி வரை கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மார்ச் 4ம் தேதி தேர்வு மைய விபரங்களையும், அட்மிட் கார்டுகளை மார்ச் 7ம் தேதியும் பெற்றுக்கொள்ளலாம். நுழைவு தேர்வுகள் மார்ச் 11 முதல் மார்ச் 28ம் தேதி வரை நடக்கும். ஏப்ரல் 4ம் தேதி விடைத்தாள் வெளியிடப்படும். சந்தேகத்திற்கு 01140759000 என்ற உதவி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

THE HINDU

PAGE NO: 02

DATE: 08.01.2024

# Pondicherry varsity sets last date to apply for various postgraduate, diploma courses

The Hindu Bureau
PUDUCHERRY

Pondicherry University will close the acceptance of online applications for various Postradaute Degree and diploma programmes on January 24, as stipulated by the National Testing Agency.

**Ph.D. applications invited**

A press note said the university has also a opened portal for accepting the applications for Ph.D. admissions only for Entrance Examination Exempted Category for the academic year 2023-24. The last date to submit the application form for this category is January 12.

Pondicherry University had commenced the acceptance for submission of online application for admission to various PG degree/diploma programmes based on the Common Universities Entrance Test CUET (PG) on December 26.

The aspirants who desire to take admissions in the Post-Graduate Degree / Diploma Programmes for 2024-25 may apply for CUET (PG) - 2024. Candidates can apply for CUET (PG) - 2024 online at: https://pgcuet.samarth.ac.in/.

The candidates must carefully refer to eligibility requirements of the programmes and select the required test paper code(s) given by the Pondicherry University in the Information Brochure available at the University website.

Candidates are advised to regularly check the website of NTA at https://pgcuet.samarth.ac.in/

Further, candidates can apply online to various Ph.D. programmes by visiting the Pondicherry University at https://www.pondiuni.edu.in/admissions-2023-24/